செ.வெ.எண்: 45 நாள்:16.08.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் 20000 எண்ணிக்கையில் நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.08.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வளர்ச்சிப்பணியினை பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு கிராமங்களில் காடுகளின் பரப்பளவுகளை அதிகரிக்கவும் மற்றும் பொதுமக்களுக்கு பயன்தரும் மரங்களை ஊராட்சிகள் மூலம் நட்டு வளர்க்கவும் உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் பூவற்றக்குடி ஊராட்சி, பூவற்றக்குடியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.13.56 இலட்சம் மதிப்பீட்டில் 20000 எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் நடவு செய்தல் பணி பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த நாற்றங்காலில் 7000 நாவல், 1000 ரோஸ்வுட், 12000 புளியங்கன்று என மொத்தம் 20000 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வின் போது நடவு செய்து பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்றுகளை தினமும் நீர் ஊற்றி பராமரிப்பதுடன் ஊராட்சிகளில் குளங்கள், கண்மாய்கள் மற்றும் சாலையோரங்களில் நட்டு வளர்க்கவும், பிற ஊராட்சிகளுக்கு தேவைப்படும் மரக்கன்றுகளை வழங்கவும், மேலும் இத்திட்டத்தின் கீழ் மரக்கன்றுகள் நடவு செய்ய நிர்ணயிக்கப்பட்ட இலக்கின்படி மீதமுள்ள மரக்கன்றுகளை நடவு செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சித்தேர்தல் 2016ல் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 52 ஊராட்சிகளில் பயன்படுத்தப்படவுள்ள 734 எண்ணிக்கையிலான வாக்குப்பெட்டிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ராஜ்மோகன், திரு.நடராஜன், ஒன்றியப்பணி மேற்பார்வையாளர்கள் திரு.குமாரசாமி, திரு.செந்தில்குமார், திருமதி.தங்கம், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.காந்தி, உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**